**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த

வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்காக அதிகாரசபைக்கு பெறப்பட்ட ரூபா 51.3 மில்லியன் ஆன அனுமதிப்பத்திர வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 பெறுமதி பரிமாற்ற பரிவர்த்தனைகளிலிருந்து எழும் பொறுப்புகளின் பிரகாரம் அனுமதிப்பத்திர காலப்பகுதியின் உரிய காலத்தில் வருமானமாக அங்கீகரிக்கப்படாமல் மீளாய்வாண்டின் எரிசக்தி அனுமதிப்பத்திர வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு ஆண்டுதோறும் கட்டாய சேவையை வழங்க எங்கள் நிறுவனம் கடமைப்படவில்லை. இதில் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவது மேற்பார்வை செய்வதன்றி சேவை வழங்கல் அல்ல. எனவே இங்கு இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு வளத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க அதிகார சபை பயன்படுத்தப்படுகிறது. எனவே, இலங்கை | பொது துறை கணக்கீட்டு நியமம் 10 இன் பிரகாரம் அனுமதிப்பத்திர வருமானமானது அனுமதிப்பத்திர காலப்பகுதியின் உரிய காலத்தில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 20 ஆம் பிரிவின் பிரகாரம் சேவைகளை நிறைவேற்றலின் ஒரு கட்டமாக அங்கீகரிக்கப்பட முடியாது என்பது எமது கருத்தாகும். | |
| (ஆ) | இந்துரான சரத்சந்திர ராஜகருண சர்வதேச நிலையத்திற்காக 2017 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த காணி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 25 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் கையகப்படுத்தப்பட்ட திகதியில் காணப்பட்ட நியாயமான பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | 2017 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த இந்துரான காணியை மதிப்பிடுவதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து முதல் அரசின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு அறிக்கை 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.எனவே இது 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் புத்தகப் பெறுமதி பூஜ்யமான கிரயம் ரூபா 355 மில்லியன் நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் , இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் , அந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கையை பாதித்த Covid-19 அனர்த்தம் காரணமாக, நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை அடையாளம் காண முடியாதிருந்தது. 2023 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு எமது அதிகாரசபைக்கு முடியும். | -மேற்படி- |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 263 செயலற்ற உபகரண விடயங்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு சொத்தின் தேறிய மதிப்பையும் தெளிவாகக் கண்டறிவதில் சிரமமான நிலைமை காணப்பட்டது. இதுவும் 2023 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உருவாக்கல், சொந்தமாக்கல் மற்றும் செயற்படுத்தல் (BOO) அடிப்படையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து மின்சாரம் உற்பத்தி மற்றும் வழங்குவதற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்பின் போது, அதிகாரசபைக்கு மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 23 மில்லியன் மீளத்திருப்பிச் செலுத்தப்படாத வைப்புத்தொகை வருமானமாகக் கணக்கீடு செய்யப்படவில்லை. | வைப்பாளர்கள் சரியான தகவல்களை வழங்காத காரணத்தால் ரூபா 23 மில்லியன் தொடர்பான வைப்புத்தொகைகள் அடையாளம் காண முடியாத நிலையிலேயே இருந்தன. எனவே, அவை 2022 ஆம் ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | ஆண்டிற்கான வருமானம் சரியாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கு வைப்பதற்கு முடியுமான வகையில் கணக்கீட்டு அமைப்பு தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 வரையில் அதிகாரசபைக்கு பெறப்படாத ரூபா 2.5 மில்லியன் ஆன 2 மின் உபகரணங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படவில்லை. | இது 2021 ஆம் ஆண்டின் கணக்குப்பதிவின்போது ஏற்பட்ட தவறு என்பதுடன் 2022 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டது. | கணக்கீட்டு குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திரும்பச் செலுத்த வேண்டிய ரூபா 195,000 ஆன வரி முற்பணத் தொகையொன்று பொறுப்பாகக் கணக்கீடு செய்யப்படவில்லை. | அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் அறிவுறுத்தல்களின்படி, 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 392(இ) | அதிகாரசபையால் விநியோகம் முடிவடைவதற்கு முன்பே செலவினங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, 2021 திசெம்பர் மாதம் ரூபா 79 மில்லியன் | 2022 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவினமாக ரூபா 50 மில்லியன் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் 2021 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீட்டில் ரூபா 78.9 மில்லியன் ஆன ஒதுக்கீடு(Allocation) 2022 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்புள்ள 12 காசோலைகளை எழுதி வைக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 61.8 மில்லியன் மதிப்பிலான 5 காசோலைகள் பின்னர் இரத்து செய்யப்பட்டிருந்தும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டில் வழங்கப்படுவதற்கு தேசிய வரவு செலவுததிட்ட திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும், நாட்டில் நிலவிய கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டுக்கான ஏனைய ஒதுக்கீடுகளை ஒதுக்க முடியாது என வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது. எனவே, உரிய பணிகள் மற்றும் பொருட்கள் முறையாக முடிக்கப்பட்ட பின்னர் வழங்குநர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 502(2) | கிரயம் ரூபா 1,008 மில்லியன் ஆன நிலையான சொத்துக்களுக்காக 11 ஆம் இணைப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதுடன் அது நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது. இது 2023 ஆம் ஆணடிறுதியில் பூரணப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்படி- |
| (iii) | நிதிப்பிரமாணம் 454,715(2),715(3),752 மற்றும் 753 | அதிகாரசபையின் இருப்பு உபகரணங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொருட்கள் பதிவேடுகளை பராமரித்தல், உபகரணங்களை பாதுகாப்பதற்கு பொறுப்பான அதிகாரிகளை நியமித்தல், முறையான அனுமதியுடன் பொருட்களை வழங்குதல் மற்றும் பொருட்கள் பெறுவனவு மற்றும் வழங்குவதற்கான முறையான அறிக்கைகளை பராமரித்தல் ஆகியவை மேற்கொள்ளப் படவில்லை. | நிதிப்பிரமாணம் 715(12) இன் பிரகாரம் பொருட்களை தங்கள் சொந்த காவலில் வைத்து பொறுப்பேற்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டு முதல் இந்த செயல்முறைகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 15.1 (ix) ஆம் பிரிவு | 2007 ஆம் ஆண்டு அதிகாரசபை நிறுவப்பட்டதிலிருந்து, அதிகாரிகளுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நடத்தப்படாமலேயே அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டு வந்தது. | வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தால் (SLIDA) நடாத்தப்படுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 28 ஆந் திகதிய PS/PCMD/C/13/2019 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | அதிகாரசபையின் எரிசக்தி செயற்திறன் மற்றும் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட வேண்டிய எரிசக்தி முகாமையாளர் மற்றும் எரிசக்தி பாதுகாப்புக் குழு நியமிக்கப்படாததுடன் அதிகாரசபையால் அனைத்து அரசு நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தி முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில், பெரும்பாலான அரசு நிறுவனங்கள் இந்த நோக்கத்திற்காக அர ஓயா எரிசக்தி பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்கியதுடன் அதற்காக அமைச்சின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகிறது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 ஒக்டோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | வாகன கைத்தவிர்ப்பு மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தும் திட்டமிட்டவாறு ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் 2019 மற்றும் 2021 ஆம் வருடங்களில் வாகன கைத்தவிர்ப்பு மூலம் ஈட்டப்பட்ட ரூபா 3.8 மில்லியன் அவ்வாறு செலவு வைக்கப்படவில்லை. | நிறுவனத்தினால் கைத்தவிர்ப்பு செய்யப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவலை நிதி அமைச்சின் Comptroller General officer இற்கு அறிக்கையிட்டுள்ளதுடன் , கணக்காய்வின் அவதானிப்புகள் குறித்து அவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் அறிவுறுத்தல்களின்படி செயற்படுவோம் என எதிர்பார்க்கப்படுகிறது. | -மேற்படி- |
| (உ) | 2019 திசம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச | 2020 சனவரி 31 இற்கு முன்னர் மின் அரச பெறுகை அமைப்புடன் | மின் அரச பெறுகை அமைப்புடன் பதிவு செய்யப்படுவதற்குத் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிச் சுற்றறிக்கை | பதிவு செய்யப்பட வேண்டியிருந்தாலும், 2022 திசெம்பர் 31 வரை அதிகாரசபை அவ்வமைப்புடன் பதிவு செய்யப்படவில்லை. | தேவையான நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/01ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் கணக்கெடுப்பு அறிக்கை 2022 மார்ச் 31 க்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் கணக்கெடுப்பு அறிக்கை 2023 சனவரி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் கணக்கெடுப்பு அறிக்கை தற்போது நிறைவடைந்துள்ளதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தி | நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு, அடுத்த 3 ஆண்டுகளுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நாளதுவரையாக்கப்பட்ட ஒருங்கிணைந்த திட்டத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 - 2025 காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | -மேற்படி- |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டு விளைவுகள் ரூபா 158 மில்லியன் ஆன மிகையொன்றாக இருந்ததுடன இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 43 மில்லியன் ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 115 மில்லியன ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரி ஒதுக்கீடு மற்றும் எரிசக்தி அனுமதிப்பத்திர வருமானம் முறையே ரூபா 49 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியன் அதிகரிப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான அழைப்பு நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 28 மில்லியன் ஆன வைப்புத்தொகை பெறப்பட்டமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களைக் கண்காணிப்பதற்காக செயற்பாட்டு அமைப்பொன்றை நிறுவும் நோக்கத்திற்காக ரூபா 126,000 பெறுமதியான 08 கையடக்கத் தொலைபேசிகள் 2020 திசெம்பர் 16 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 சனவரி 23 வரை அந்த அமைப்பு நிறுவப்படாததுடன் . சம்பந்தப்பட்ட பணிகளுக்கு தொலைபேசிகளைப் பயன்படுத்தாமல் அவற்றில் 6 தொலைபேசிகள் அதிகாரசபை ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி வழங்கப்படடிருந்தன. சம்பந்தப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் ஊழியர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை. | வாகனங்களைக் கண்காணிப்பதற்காக செயற்பாட்டு அமைப்பொன்றை நிறுவுவதற்கு 2023 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2020 திசெம்பரில் வாங்கப்பட்ட தொலைபேசிகளை கடந்த ஆண்டில் வீட்டில் இருந்தே பணியாற்ற வேண்டியேற்பட்ட காலத்தில் நிறுவனத்தின் வெளித் தரப்பினருடன் தொடர்பு கொள்ளும் அதிகாரிகளுக்கு வழங்குவதற்கு நிர்வாகம் முடிவு செய்தது.மேலும், வெளி தரப்பினருடன் தொடர்பு கொள்ளும் அதிகாரிகளுக்கு இத்தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. . | சொத்துக்கள் சரியான நேரத்தில் வாங்கப்பட வேண்டியதுடன் அவை எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2007-2009 ஆண்டுகளில், 3 மின்சார வாகனங்களை தயாரிப்பதற்காக, அதிகாரசபையால் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 7.8 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 7 ஆம் தேதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவிற்கு இது தொடர்பாக அதிகாரசபையால் தவறான தகவல் அளிக்கப்பட்டதுடன் இந்தப் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் , இது தொடர்பான உண்மை நிலவரத்தை பிரதான கணக்கீட்டு அலுவலர் மூலம் பொது முயற்சிகள் செயற்குழுவிற்கு தெரிவிக்க வேண்டுமென்ற குழுயின் | இத்திட்டத்தின் சிக்கல் தேசிய நடுவர் மன்றத்திற்கு(National Arbitration Council) பரிந்துரைக்கப்பட்டு, அங்கு நடந்த விவாதங்களின் அடிப்படையில், மின்சார வாகன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான கருவியாக ஒரு மாதிரியை அதிகாரசபையிடமிருந்து பெற்று இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சபையினால் 2022.11.21 அன்று முடிவு செய்யப்பட்டது. | குழுவின் உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு தேவையற்ற செலவுகள் செய்தல் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமையில் 2013 சனவரி 4 இல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன 2023 சனவரி வரையில் தொடர்புடைய பணிகள் முடிக்கப்படவில்லை | | |
| (இ) | அதிகாரசபையால் தலைமை அலுவலகத்திற்காக எரிசக்தி செயற்திறன் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மொத்த செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்படடு அதற்காக அதிகாரம் பெற்ற ஒரு பெறுகைக் குழுவின் ஒப்புதலைப் பெறாமலேயே, கட்டிடத்தின் வடிவமைப்பு திட்டங்களுக்காக 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 23.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்படாத நிலையில், இதன் காரணமாக நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதன்படி மேற்படி செலவு பொருளாதாரமற்ற செலவீனமொன்றாக மாறியுள்ளது. | அரச மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமை மற்றும் இது தொடர்பாக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை ஏற்படுத்துவதற்கு நிதியமைச்சு உடன்படாததன் அடிப்படையில் இப்பணியை மேலும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பொருளாதாரமற்ற செலவுகள் செலவுகள் செய்தல் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 46 (2) (ஈ) இன் பிரகாரம் | இப்பிரிவின் கீழ் அப்படியான எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. | சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கையில் நிலக்கரி சொத்துக்களை நிர்வகிப்பதற்காக அபிவிருத்தியாளர்களிட மிருந்து கட்டணம் வசூலிக்க முடியுமான போதிலும் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு உரிய கட்டணங்களை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கட்டிருக்கவில்லை. | | கட்டணங்களை வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 2016 மார்ச் 4 ஆம் திகதிய PE/TECH/D/06/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்காக அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தரவுகளை அதிகாரசபை முறையாகச் செயற்படுத்தவில்லை. அந்த சுற்றறிக்கையின் 16 வது பிரிவின்படி, திட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படாத திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நிர்வாக சபையினால் தயாரிக்கப்படாததுடன் பிரிவு 17 இன் பிரகாரம் விசேட அனுமதிப்பத்திரத்தின் காலம் காலாவதியாகிவிட்ட சிறிய நீர்மின் திட்டங்களின் இருப்பிட சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் அரசிற்கு கையளிக்கப்பட்ட திறந்த விலை மனுக்களை அழைப்பதன் மூலம் பொருத்தமான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்வதற்காக மின்சார சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், இவ்வாறான 30 சிறு நீர் மின் திட்டங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் விரைவு படுத்தல் ஏற்கனவே தொடங்கப்பட்டு, ஆலோசனைக் குழு பரிந்துரைகள் மூலம் அந்த திட்டங்களுக்கு எரிசக்தி அனுமதிப்பத்திரம் நீடித்து வழங்கப்பட்டுள்ளது. | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் வகையில், அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை திறமையாக நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் கீழ் மத்திய கட்டத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு ஆண்டுதோறும் அரசின் பங்கொன்று அறவிடப்பட முடியுமானபோதிலும் அதற்காக தேவையான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பல தடவைகள் அமைச்சரவையின் அங்கீகாரம் கோரி பல்வேறு அமைச்சர்கள் அமைச்சரவை பத்திரங்களை தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தும் அந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. இவ்வாறு அரச கட்டணத்தை வசூலிப்பதன் மூலம் மின் கட்டணம் மேலும் அதிகரிக்கும் என்று அமைச்சு மற்றும் அதன் அமைச்சர்களும் கருதுகின்றனர். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியமைச்சரின் ஒப்புதலுடன், படிம எரிபொருட்களின் உற்பத்தி இறக்குமதி அடிப்படையில் செஸ் வரி விதிக்க வேண்டிய போதிலும் அதிகாரசபை அமைக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்தும் அதற்கான பிரமாணங்கள் தயாரிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய PF/PE/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக வெளிநாட்டுத் திட்டமொன்றின் கீழ் அதிகாரசபைக்கு பெறப்பட்ட பணத்தில் இருந்து 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3 மில்லியன் ஆன தொழில்சார் கொடுப்பனவு மீள அறவிடப்பட வேண்டுமென மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் 2012 திசெம்பர் 03 ஆம் திகதிய PE/IA/22/VOL.II ஆம் இலக்க கடிதத்தில் அதிகாரசபையின் தலைவருக்கு உத்தரவிடப்பட்டிருந்தாலும், 2023 சனவரி இற்குள் அதற்கான பணம் அறவிடப்படவில்லை. | Switch Asia திட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு பெறப்பட்ட பணத்தில் இருந்து 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,135,202.00 தொழில்சார் கொடுப்பனவு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பிரகாரம் மீள அறவிடப்படுவதற்கு அந்த திட்டத்தில் குறிப்பாக ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021/07/27 ஆம் திகதிய SMRC/FIN/SLSEA/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட கொடுப்பனவு மீள அறவிடப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பகுதியிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை நிறுவப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரையிலும் அத்தகைய திட்டம் எதுவும் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. இதன் விளைவாக, எரிசக்தி அபிவிருத்திப் பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் அபிவிருத்திப் பணிகள் மிகவும் மந்தகதியில் காணப்பட்டது. அதிகார சபையால் பல்வேறு மாவட்டங்களில் 269,562 ஹெக்டெயர் காற்றாலை எரிசக்தி அபிவிருத்திப் பகுதிகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலும், 2021 திசெம்பர் 31 நிலவரப்படி, 206 ஹெக்டெயர் காணியில் மட்டுமே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் ஆரம்ப அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | போதுமானளவு மனித வளமொன்று இல்லாமையுடன் 2020 ஆம் ஆண்டில் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 21 அன்று பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக வெளியிடப்பட்டிருந்தது. பொதுமக்களின் கருத்தின்படி முடிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க அபிவிருத்தி திட்டம் மூன்று மொழிகளிலும் 2021 நவம்பர் 26 அன்று செயலாளர், சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின்சாரத் திட்டங்களின் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் தேவையான அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கான பின்தொடரல் செய்யப்பட்ட வருகின்றதுடன் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் விரைவில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்தித் திட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை மின்சார சபையின் மத்திய வலையமைப்பில் காணப்பட்ட திறன் (Available Grid Capacity) போதியளவில் இல்லாத பிரச்சினைக்கு தீர்வாக, அதிகாரசபையால் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 5(இ) | மத்திய வலையமைப்பிற்கு வெளியே செய்யப்படுகின்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான அனுமதி கோரிக்கைகள் பெறப்படவில்லை. அத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் பிரகாரம் மத்திய வலையமைப்பிற்கு வெளியான )off grid ( புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் செய்யப்படவேண்டிய போதிலும் அதிகாரசபையால் அதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, சட்டத்தின் 25 (அ) பிரிவின் பிரகாரம் 2023 சனவரி வரை மத்திய வலையமைப்பிற்கு வெளியே எவ்வித புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்திற்கும் எரிசக்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முடியாதிருந்தது. | அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியும். | |
| (இ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 47(1) ஆம் பிரிவின் பிரகாரம் எரிசக்தி செயற்திறன் தொடர்பான திட்டமொன்றை நடாத்திச் செல்வதற்காக கடனுக்கு விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கத்திற்காக சுனித்யா எரிசக்தி உத்தரவாத நிதியம், நிறுவப்பட்டிருந்தும் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணிகள் இது வரை மேற்கொள்ளப் படவில்லை. | சுனித்யா எரிசக்தி உத்தரவாத நிதியம் நிறுவப்பட்டு, நிதியின் நோக்கங்களை நிறைவேற்ற தேவையான விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் மிக விரைவில் வழிகாட்டுதல்கள் செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் 2.45 ஹெக்டேர் அளவுள்ள 45 காணிகள் ளை அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்டிருநத போதிலும், சட்டத்தின் 32 ஆவது பிரிவின்படி அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட 29 காணிகள் முறையாக குத்தகைக்கு விடப்படவில்லை. 2020 திசெம்பர் இல், குத்தகைக்கு விடப்பட்ட நிலமொன்றுக்காக அறவிடப்பட | அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்ட 45 காணிகளில் 16 காணிகள் முறையான குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எஞ்சிய 29 காணிகள் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் உரிமையியல் விசாரணைகள் முடிந்த பின்னர் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததன் பின்னர் நிலுவையில் உள்ள குத்தகை தொகையுடன், உரிய குத்தகை தொகையயும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | காணி கையகப்படுத்தப்பட்ட பின்னர் விரைவில் அபிவிருத்தியாளருக்கு முறையாக காணி ஒப்படைக்கப்பட்டு அன்றைய தினம் முதல் குத்தகைப் பணத்தை வசூலிக்கும் வகையில் பொருத்தமான அமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியரூபா 780,000 ஆன குத்தகைத் தொகை அறவிடப்பட வில்லை. | | |
| (உ) | 2019 ஆகஸ்ட் 9 ஆந் திகதிய 2135/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயக் குறியீட்டில் 4 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் மைல்கற்கள் மற்றும் நிறுவனத்தின் பொறுப்புகள அந்தந்த பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களால் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபைக்கு சட்டப்பூர்வமாக ஒதுக்கப்பட்ட 10 பொறுப்பான பணிகள் தொடர்பான முன்னேற்றம் அதிகார சபையால் மீளாய்வு செய்யப்படவில்லை. | இந்த மீளாய்வை மேற்கொள்வதற்கான பொறுப்பு, அது தொடர்பாக நிறுவப்பட வேண்டிய ஒழுங்குபடுத்தல் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொள்கை அறிவிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும், அது தொடர்பான எரிசக்தி துறையில் நிறுவன கட்டமைப்பில் எந்த சீரமைப்பும் இதுவரை மேற்கொள்ளப்படாததுடன் அதிகாரசபை ஏனைய நோக்கங்களுக்காக அதன் திறனை இயக்கியுள்ளதால், இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் இன்னும் பொருத்தமானதாக உள்ளதா என்பதில் சிக்கல் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. | இலங்கையின் தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயக் குறியீட்டின் இலக்கம் 4 இற்கு இணங்க அதிகாரசபையால் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சரினால் செய்யப்பட்ட 2011 மே 10 ஆம் திகதிய 1705/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட உத்தரவுகளின் (பிரமாணங்கள்) பிரகாரம் 700 மெகாவாட் திட்டத்திற்காக ரூபா 35 மில்லியன் விண்ணப்பக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு மாறாக ரூபா 5 மில்லியன் கட்டணமொன்று அறவிடப்பட்டு மீதமுள்ள தொகையை பின்னர் வசூலிப்பதன் அடிப்படையில் தற்காலிக அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் கையொப்பமிடப்பட்ட 2022.03.22 அன்று இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாடடிக் கோவையின் 5.4.8 வழிகாட்டுதலின் பிரகாரம் இன் பணிகள் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலத்தை விட 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் வகையில் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக செயற்திறன் பாதுகாப்பொன்று பெறப்பட வேண்டியுள்ள போதிலும் அதிகாரசபையால் ரூபா 21.6 மில்லியன் மதிப்புள்ள 6 ஒப்பந்தங்களுக்கான செயற்திறன் பாதுகாப்பு அதற்கு இணங்க பெறப்படவில்லை. | இது தொடர்பான விடயம் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் அதிகாரசபையால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில எடுக்கப்படும். | அரச பெறுகை வழிகாடடிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1.6 மில்லியன் செலவிடப்பட்டு 2019 வருடாந்த அறிக்கையை அச்சிடும் நடவடிக்கை ஒப்பநதத்தின் பிரகாரம் முடிக்கப்பட வேண்டிய திகதிக்கு 111 நாட்கள் தாமதமாக முடிக்கப்பட்டிருந்தாலும், தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனைகள் ஒப்பநதத்தில் சேர்க்கப்படாத காரணத்தால் தாமதக் கட்டணத்தை வசூலிக்க முடியாதிருந்தது. | இது தொடர்பான விடயம் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் அதிகாரசபையால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில எடுக்கப்படும். | பெறுகை நடவடிக்கைகளில் அரசிற்கு ஏற்படக்கூடிய இழப்புகளை குறைக்கும் வகையில் ஒப்பந்தங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 பிற நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் பொது முயற்சிகளின் வளங்கள் வரிசை அமைச்சுக்கோ அல்லது அரச நிறுவனங்களுக்கோ வழங்கப்படுவது தடைசெய்யப்பட்ட போதிலும், அதிகாரசபையால் பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி ரூபா 1.1 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1.6 மில்லியன் மதிப்புள்ள மின்னணு சாதனமொன்று (smart interactive whiteboard) | 2021 ஆம் ஆண்டில் அரச அமைச்சு ஊழியர்களின் சேவை மேலதிக நேர கொடுப்பனவு ஏப்ரல் மாதம் புத்தாண்டு விடுமுறைக்கு முன்னர் செலுத்துவதற்கான பணம், இராஜாங்க அமைச்சிற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்காத காரணத்தினால் அம்மேலதிக நேர கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான பணம் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டது. இராஜாங்க | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் கிரயம் தொடர்பான தகவல் கிடைக்காத 30 சொத்து விடயங்கள் மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இராஜாங்க அமைச்சிடம் வழங்கப்படடிருந்தன. | அமைச்சின் செயலாளரினால் அதற்கான மேவுகை அங்கீகாரம் பின்னர் வழங்கப்பட்டது. கணக்காய்வில் பரிந்துரைக்கப்பட்டதன் படி, அமைச்சிற்கு வழங்கப்பட்ட 30 உருப்படிகள் மற்றும் Smart interactive whiteboard screen ஒன்றை அமைச்சின் பயன்பாட்டிற்கு வழங்குவது பற்றி முகாமைத்துவ சபைக்கு தெரிவிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் 270 நாட்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2022 நவம்பர் 25 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை கணக்காய்விற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் எதிர்வரும் மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக பணப்பாளர் சபையின் அனுமதியுடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை. | 2022-2025 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவையயான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |